



**வணக்கம் வாசகர்களே...!**

**உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் நிகழ்வுகளை நீங்கள் உறுதிப்படுத்தி விபரங்களுடன் தெளிவான புகைப்படங்களையும் இணைத்து எங்களுக்கு அனுப்பி வைக்கலாம். அத்தோடு நிகழவிருக்கும் நிகழ்வுகள் பற்றியும் எமக்கு தகவல் அனுப்பி வையுங்கள்,**

**எமது மின்னஞ்சல் முகவரி: aikkiyakural@gmail.com**

# WFP பணிப்பாளர் ரஹீம், FAO பிரதிநிதி சராண் அமெரிக்க செனட்டர் கெரி - சஜித்துடன் சந்திப்பு





உலக உணவுத் திட்டத்தின் (WFP) இலங்கைப் பணிப்பாளர் அப்துர் ரஹீம், உணவு மற்றும் விவசாய முகவரான்மையின் (FAO) பிரதிநிதி விமலேந்திர சராண், அமெரிக்காவின் முன்னாள் செனட் சபை உறுப்பினர் பொப் கெரி ஆகியோர் கடந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்தனர்.

உலக உணவுத் திட்டத்தின் இலங்கைப் பணிப்பாளர் அப்துர் ரஹீம் மற்றும் உலக உணவுத் திட்டத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதி, உணவு மற்றும் விவசாய முகவராண்மையின் (FAO) பிரதிநிதி விமலேந்திர சராண் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று அன்மையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

உணவுப் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து இதன் போது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டதோடு, இலங்கை எதிர்நோக்கும் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் தாங்கள் சிறப்புக் கவனம் செலுத்துவதாகவும் இதன் போது அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, அமெரிக்காவின் முன்னாள் செனட் சபை உறுப்பினர் பொப் கெரிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று அண்மையில் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

அவர் ஜனாதிபதி ஜோ பைடனின் முன்னாள் ஆலோசகராகவும் பணி புரிந்தவராவார். இரு நாடுகளையும் பாதிக்கும் பல பொதுவான பிரச்சினைகள் குறித்து சுமுகமான கலந்துரையாடல் இடம் பெற்றதோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் முக்கியத்துவம் குறித்தும் இதன் போது எடுத்துரைக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவரின் எண்ணக்கருவின் பிரகாரம் செயல்படுத்தப்படும் "மூச்சு" மற்றும் "பிரபஞ்சம்" திட்டங்கள் குறித்து பொப் கெரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் விளக்கமளித்ததோடு, தொடர்புடைய நலன்புரித் திட்டங்களில் அமெரிக்க பரோபகாரர்களின் ஆதரவின் முக்கியத்துவத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது வலியுறுத்தினார்.

# இலங்கை மீதான நம்பிக்கை இழப்பு

அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகளால் சர்வதேசம் இலங்கை மீது கொண்டிருந்த நம்பிக்கை முற்றாக இழக்கப்பட்டுள்ளது. இதனால் சர்வதேசத்திடமிருந்து கிடைக்கப்பெறும் உதவிகளும் பூச்சியமாகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொவிட் தீவிரமடைந்திருந்த கால கட்டத்தில் சுகாதார தரப்பினர் அனைவரும் அயராது பாடுபட்டு உழைத்தனர். அவர்களின் அர்ப்பணிப்பை அரசாங்கம் மறந்துள்ளது. சுகாதார தரப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் பெரும்பாலானவை நியாயமானவையாகும். எனவே அரசாங்கம் அவர்களின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வினை வழங்க வேண்டும்.

ஆனால் அரசாங்கம் நாட்டிலுள்ள வேறு எந்த பிரச்சினைகள் குறித்தும் சிந்திக்காது கடன் தவணையை எவ்வாறு மீள செலுத்துவது , அதற்கான டொலரை எவ்வாறு பெறுவது என்பது குறித்து மாத்திரமே சிந்தித்துக் கொண்டிருக்கிறது. நாட்டில் எஞ்சியுள்ள தங்கத்தை விற்று, இருப்பிலுள்ள சுமார் மில்லியன்களில் சிறு தொகை கடனை மீள செலுத்திவிட்டு அதன் பின்னர் என்ன செய்வது என்ற எந்த திட்டமிடலும் அரசாங்கத்திடம் இல்லை.

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் சர்வதேசம் இலங்கை மீது கொண்டிருந்த நம்பிக்கை முற்றாகக் இழக்கப்பட்டுள்ளது. இதனால் சர்வதேசத்திடமிருந்து கிடைக்கப் பெறும் உதவிகள் , ஒத்துழைப்புக்கள் , நிவாரணங்கள் பூச்சியமாகியுள்ளன என்றார்.

# மீண்டும் தலை தூக்கும் வெள்ளை வான் கலாசாரம்



இலங்கையில் மீண்டும் வெள்ளை வான் கலாசாரம் தலைதூக்குவது தொடர்பில் கொழும்பு ஆயர் இல்ல பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ கவலை தெரிவித்தார்.

சிவில் செயற்பாட்டாளர் ஷெஹான் மாலக்க கைது செய்யப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர் சமுதித சமரவிக்கிரம தாக்கப்பட்டமை தொடர்பில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வன்மையாக கண்டனம் தெரிவித்துள்ளார் என்றும் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்கு சற்று முன்னர் இந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன், சர்வதேச ரீதியில் இலங்கைக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று அவர் கூறினார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக பிரச்சாரம் செய்த ஒருவர் கைது செய்யப்படுவதும், மக்களுக்கு உண்மையைத் தெரிவிக்க ஊடகங்களைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதும் வருத்தமளிப்பதாக அவர் கூறினார்.

# எரிபொருள் விலை சூத்திரத்தை நன்கு சிந்தித்து தயாரிக்கவேண்டும்

மங்கள சமரவீர எரிபொருள் விலை சூத்திரம் கொண்டுவந்தபோது அதனை விமர்சித்தவர்கள்தான் தற்போது விலை சூத்திரம் கொண்டுவரப்போகின்றனர். விலை சூத்திரம் பாரியதொரு விடயமல்ல. என்றாலும் புத்தியை பாவித்து தயாரிக்கவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டிசில்வா தெரிவித்தார்.

உலகில் அதிகமான நாடுகளில் விலை சூத்திரம் தயாரிக்கப்படுகின்றது. அதனை தயாரிக்கும் போது மிகவும் சிந்தித்து செயற்படவேண்டும். எமது ஆட்சிக்காலத்தில் நிதி அமைச்சராக இருந்த மங்கள சமரவீர எரிபொருள் விலை சூத்திரம் தயாரித்து நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் எரிபொருள் விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். ஆனால் மங்கள சமரவீரவின் எரிபொருள் விலை சூதிதிரத்தை அன்று கடுமையாக விமர்சித்தார்கள். அவ்வாறு விமர்சித்தவர்கள்தான் தற்போது விலை சூத்திரம் கொண்டுவருவதாக தெரிவிக்கின்றனர்.

# கெஹலியவுக்கு எச்சரிக்கை



தாதியர்கள், இடை மற்றும் துணை மருத்துவ சேவை வழங்குநர்களின் சம்பளப் பட்டியல் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளை சுகாதார அமைச்சர் வெளியிட முன்வந்தால், சுகாதார அமைச்சின் அதிகாரிகளின் சம்பளப் பட்டியலை வெளியிடுவோம் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும்மேலதிக செயலாளர்களின் சம்பளப் பட்டியல் ஆகியவற்றையே வெளியிடவுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தொழிற்சங்க தலைவர் உபுல் ரோஹன மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான அதிகாரிகள் நாளொன்றுக்கு எவ்வவு சம்பாதிக்கிறார்கள், தரை மட்ட ஊழியர்கள் ஒரு மாதத்துக்கு எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்பது பொதுமக்களுக்கு தெளிவாகத் தெரிய வரும் என்றார்.

கொரோனா தொற்றின் ஆரம்பக் கட்டங்களில் கடமையில் இருந்த அதிகாரிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு அல்லது பாதுகாப்பு உபகரணங்களை வழங்க சுகாதார அமைச்சினால் முடியவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.